Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 3.11.2024/

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 3.11.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பாய் தூஜ் விழாவை ஒட்டி நாட்டு மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

காசநோய்க்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜார்கண்டில் பழங்குடியினர் நிலங்களை பாதுகாக்க பாஜக ஆட்சி அமைய வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 6 நாள் அரசு முறை பயணமாக இன்று ஆஸ்திரேலியா மற்றும சிங்கப்பூருக்கு செல்ல உள்ளார்.

*பாய் தூஜ்* (14)

பாய் தூஜ் விழாவை ஒட்டி நாட்டு மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த பண்டிகை சகோதர சகோதரிகளுக்கு இடையேயான அன்பை ஆழப்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். சகோதர சகோதரிகளுக்கு இடையேயான அன்பையும் பண்பையும் வெளிப்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் பாய் தூஜ் விழா கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகையின் போது சகோதரர்கள் தங்களது சகோதரிகளின் ஆயுள் காலம் நீடிக்க விரதம் இருந்து பூஜைகள் மேற்கொள்வார்கள். தொடர்ந்து சகோதரிகளுக்கு நெற்றியில் திலகமிட்டு ஒருவருக்கு ஒருவர் இனிப்புகளையும் பரிசுகளையும் பரிமாறிக் கொள்வார்கள்.

பாய் தூஜ் பண்டிகையை ஒட்டி நாட்டு மக்கள் அனைவருக்கும் மத்திய உள் துறை அமைச்சர் திரு அமித்ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த பண்டிகை அனைவருக்கும் மகத்தான மகிழ்ச்சியை தரட்டும் என்று அவர் தமது சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளார்.

மோடி-காசநோய் (12)

காசநோய்க்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை காசநோயை 17.7 சதவிகிதம் குறைப்பதில் இந்தியாவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உலக சுகாதார அமைப்பு அங்கிகரித்து இருப்பது குறித்து மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜேபி நட்டா வெளியிட்ட பதிவுக்கு பதில் அளித்து பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக ஊடகப்பதிவில் வெளியிட்டுள்ள செய்தியில், இது ஒரு பாராட்டத் தக்க முன்னேற்றம் என்றும், காசநோய் பாதிப்பு குறைந்து இருப்பது இந்தியாவின் அர்ப்பணிப்பு மற்றும் புதிய கண்டுபிடிப்பு முயற்சிகளின் விளைவாகும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். காசநோய் இல்லாத இந்தியாவை நோக்கி தொடர்ந்து பயணிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோடி வாழ்த்து (5)

போட்ஸ்வானா நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு டுமா போக்கேவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியா- போட்ஸ்வானா இடையே இருதரப்பு உறவுகளை மேலும்

வலுப்படுத்த அவருடன் நெருக்கமாக இணைந்து பணியாற்ற தாம் ஆவலுடன் இருப்பதாக அவர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

*அமித்ஷா* 1(15)

ஜார்கண்டில் பழங்குடியினர் நிலங்களை பாதுகாக்க பாஜக ஆட்சி அமைய வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார். விரைவில் ஜார்கண்ட் மாநிலத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இன்று ராஞ்சியில் நடைபெற்ற பாஜக பொதுக் கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார். நடைபெற இருக்கும் ஜார்கண்ட் மாநில சட்டப் பேரவை தேர்தல் ஆட்சி மாற்றத்திற்கு மட்டும் அல்லாமல், ஜார்கண்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தல் என்றும் கூறினார். ஜார்கண்டில் பழங்குடியின பெண்களை திருமணம் செய்து கொண்ட பிறகு ஊடுருவல்காரர்கள் அவர்களிடமிருந்து நிலத்தை அபகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாஜக வின் தேர்தல் அறிக்கையில் கூறப்படும் அம்சங்கள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார். ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ஏழை எளிய பழங்குடியினர் மற்றும் தலித் இன மக்கள் பாஜக வின் தேர்தல் அறிக்கையை பெரிதும் எதிர்பார்த்துக்

கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் அவர் மாநில பாஜக-வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

*அமித்ஷா* 2 (7)

அதில், அனைத்து குடும்பங்களுக்கும் 500 ரூபாய் விலையில் எல்பிஜி சிலிண்டர் வழங்கப்படும் என்றும், கோகோ திதி யோஜனா திட்டத்தின் கீழ், மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணிற்றும் மாதம் 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், வேலை இல்லா பட்டதாரி மற்றும் முதுகலை பட்டதாரி இளைஞர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் 5 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*ஜெய்சங்கர்* (15)

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 6 நாள் அரசு முறை பயணமாக இன்று ஆஸ்திரேலியா மற்றும சிங்கப்பூருக்கு செல்ல உள்ளார். இந்த பயணத்தின் போது அவர் ப்ரிஸ்பென் நகரில் இந்தியாவின் 4 ஆவது தூதரகத்தை தொடங்கி வைக்கிறார். மேலும், கான்பெராவில் உள்ள ஆஸ்திரேலிய அமைச்சர் பென்னி வோங்குடன்

இணைந்து 15 ஆவது வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டிலும் அவர் பங்கேற்று உரையாற்ற உள்ளார். ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்திலும் அவர் உரையாற்றுகிறார். தொடர்ந்து, ஆஸதிரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள், இந்திய சமூகத்தினரையும் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேச உள்ளார். இந்த பயணத்தின் 2 ஆவது கட்டமாக வருகிற 8 ஆம் தேதி சிங்கப்பூர் செல்லும் அவர், அங்கு இந்திய-ஆசியான் அமைப்பின் 8 ஆவது வட்ட மேசை மாநாட்டிலும் உரையாற்றுகிறார். தொடர்ந்து சிங்கப்பூர்தலைவர்களை சந்தித்து பேசும் அவர் இந்தியா-சிங்கப்பூர் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

*ராஜ்நாத் சிங்* 1 (16)

வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற தொலைநோக்கு பார்வையை நனவாக்க உயர் தர தொழில்நுட்பங்களை உள்நாட்டிலேயே உருவாக்க வேண்டும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். கான்பூர் ஐஜடியின் 65 ஆவது நிறுவன தின விழாவில நேற்று பங்கேற்று பேசிய அவர், தற்போதைய சூழ்நிலையில் தொழில்நுட்பம் மிகப் பெரிய முக்கியத்துவம் பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

இளைஞர்கள் தங்களது திறனை முழுமையாக மேற்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

போர் சூழ்ந்துள்ள நிலைகளில் தொழில்நுட்பத்தின் தேவை அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். டிரோன்கள், ஆயுதங்கள், சைபர் தாக்குதல்கள் துல்லியமாக செலுத்தப்படும் ஏவுகணைகள், ஹைப்பர் சோனிக் ஏவுகணைகள் ஆகியவற்றின் பயன்பாடு போர்களில் தொழில்நுட்பம் சார்ந்த ஒன்றான மாற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்புத் துறையில் இந்தியாவை தற்சார்பு உடையதாக மாற்ற தனியார் துறையினர், கல்வியாளர்கள் உள்ளிட்ட அனைத்து துறையினரையும் ஒன்றிணைக்க மத்திய அரசு உறுதி பூண்டு

*ராஜ்நாத் சிங் 2 (5)*

இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். 10 ஆண்டுகளுக்கு முன்பு வெறும் 600 கோடி ரூபாயாக இருந்த தளவாட ஏற்றுமதி நடப்பு நிதியாண்டில் 21 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி சாதனை படைத்திருப்பதாக தெரிவித்தார். அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவின் தளவாட ஏற்றுமதியின் அளவு 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

*கீர்த்திவர்தன் சிங்* (13)

பல்லுயிர் பெருக்கத்தை காக்கும் வகையில் இந்தியா தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார். கொலம்பியாவில் நடைபெற்ற சர்வதேச சுற்றுச்சூழல் மாநாட்டில் இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட பல்லுயிர் பெருக்க செயல்பாட்டு திட்டத்தினை அவர் வெளியிட்டு பேசினார். அரசும், சமூகமும் முழுமையாக செயலாற்றும் வகையில் இந்த செயல் திட்டம் அமைக்கப்பட்டு இருப்பதாக அவர் குறிப்பிட்டார். சுற்றுச்சூழல் அமைப்பு சீரழிவை தடுப்பது, ஈர நிலங்களை பாதுகாப்பது, கடல் மற்றும் கடலோர பகுதிகளை சீரமைப்பது உள்ளிட்டவற்றில் புதுப்பிக்கப்பட்ட பல்லுயிர் பெருக்க செயல் திட்டம் கவனம் செலுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். வருகின்ற 2030 ஆம் ஆண்டிற்குள் பல்லுயிர்பெருக்க இழப்பை தடுத்து நிறுத்தும் வகையில் இந்த செயல் திட்டம் அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

விண்வெளி சூழல் ஆய்வு மையம் (18)

சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகங்களில் நிலப்பரப்பை போல் காணப்படும் பனி சூழ்ந்த லடாக் பகுதியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ தனது முதல் விண்வெளி சூழல் ஆராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கி உள்ளது. நிலவில் நீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை முதலில் கண்டுபிடித்து தெரிவித்த இஸ்ரோ நிலவுக்கு மனிதனை அனுப்பி ஆராய்ச்சி செய்யவும் திட்டமிட்டு வருகிறது. இதே போல் செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யும் பணியிலும் இஸ்ரோ மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இதற்காக சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகம் போன்ற புவியியல் நிலப்பரப்பை கொண்ட லடாக்கில் இஸ்ரோ தற்போது முதல் விண்வெளி சூழல் ஆய்வு மையத்தை உருவாக்கி உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 3 ஆயிரம் மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள லடாக்கில் பிராண வாயுவின் அளவு வெறும் 40 சதவிகிதம் மட்டுமே உள்ளது. இது செவ்வாய் கிரகத்தை போன்ற சுற்றுச்சூழலாகும். மேலும் லடாக் பகுதியின் புவியியல் அம்சங்கள் வறண்ட மற்றும் குளிர்ந்த காலங்களில் தரிசு நிலம், உயரமான நிலப்பரப்பு ஆகியவை செவ்வாய் மற்றும் சந்திரன் கிரகங்களில் நிலப்பரப்பை போல் காணப்படுவதாக கருதப்படுகிறது. இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கு இந்த லடாக் விண்வெளி ஆய்வு மையம் பெருமளவில் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*ராகுல்காந்தி* (5)

கேரளாவின் வயநாட்டில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் பிரச்சார கூட்டத்தில், அக்கட்சியின் மூத்த தலைவரும், அத்தொகுதியின் முன்னாள் மக்களவை உறுப்பினருமான திரு ராகுல்காந்தி இன்று பங்கேற்றார். அவர் அத்தொகுதியில் போட்டியிடும் திருமதி பிரியங்கா காந்தியை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

*சிறப்பு ரயில்கள்* (12)

இந்திய ரயில்வே இன்று டெல்லியில் இருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சுமார் 20 பண்டிகை கால சிறப்பு ரயில்களை இயக்கி வருகிறது. சத்பூஜைக்காக இம்மாதம் 2 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை 145 கூடுதல் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. பண்டிகை காலங்களில் லட்சக்கணக்கான பயணிகளுக்கு தடையில்லா பயணத்தை உறுதி செய்யும் வகையில் தினமும் கூடுதலாக 2 லட்சம் பயணிகளின் பயணத்தை ரயில்வே எளிதாக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் பண்டிகை காலங்களில் லட்சக்கணக்கான பயணிகளின் பயணத்தை எளிதாக்கும் வகையில் சிறப்பு ரயில்களை ரயில்வே இயக்குகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 2 ஆயிரத்து 800 சிறப்பு ரயில்கள் குறிப்பிடத் தக்க அளவில்

அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் 4 ஆயிரத்து 500 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பாய் தூஜ் விழாவை ஒட்டி நாட்டு மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

காசநோய்க்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜார்கண்டில் பழங்குடியினர் நிலங்களை பாதுகாக்க பாஜக ஆட்சி அமைய வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் 6 நாள் அரசு முறை பயணமாக இன்று ஆஸ்திரேலியா மற்றும சிங்கப்பூருக்கு செல்ல உள்ளார்.